*Tamilmanam – International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Monthly · In tamilmanam.in
Vol. 12 No. 05 (2026): Tamilmanam October 2026

RESEARCH ARTICLE

# மானுடத்தின் மெய்யியல்: சுய அறிவும், இயற்கைச் சமநிலையும், உலக அமைதிக்கான கல்வியும்

*Philosophy of Humanity: Integrating Evolutionary Equality, Biochemical Balance, and Educational Metaphors for Global Peace*

**சடகோபன் காளிதாஸ்[1,*]**, **த வனிதா சடகோபன்[2]**
[1] நந்தா பொறியியல் கல்லூரி
[2] தி இன்ட்யன் பப்ளிக் ஸ்கூல்
***தொடர்பு ஆசிரியர்:** சடகோபன் காளிதாஸ், sadaivanitha@gmail.com
**ORCID iD:** சடகோபன் காளிதாஸ் https://orcid.org/0009-0007-5819-1259

DOI: https://doi.org/10.63300/tm12052026.17

ARTICLE INFO

**Article history**
Received: 2 October 2026
Revised: 3 October 2026
Accepted: 5 October 2026

**Article ID**
TIRJTS-2026-0017

**Peer review**
Double-blind peer review

**Keywords**
சுய அறிவு (Self-Realization)
மானுடச் சமத்துவம் (Human Equality)
உயிரியல் தகவமைப்பு (Biological Adaptation)
உள்ளுறுப்புகளின் பரஸ்பர ஒத்துழைப்பு (Interdependence of Internal Organs)
வேதியியல் சமநிலை (Biochemical Balance)
அறுசுவை உணவு (Six-Taste Diet / Balanced Nutrition)
மனிதநேயக் கல்வி (Humanistic Education)
உலக அமைதி (Global Peace)

ABSTRACT

இவ்வாய்வு மனித உடலின் இயக்கம், உயிரியல் தகவமைப்பு, இயற்கையின் உணவுச் சுழற்சி மற்றும் மனிதநேயக் கல்வி ஆகியவற்றை ஒன்றிணைக்கும் ஒரு விரிவான வாழ்வியல் மெய்யியலை முன்வைக்கிறது. உயிரற்ற மின்னணு சாதனங்களைக் நுணுக்கமாகக் கையாளும் நவீன மனிதன், உயிருள்ள தன் உடலின் இயக்கம், வாழ்வின் நோக்கம் மற்றும் "நான் யார்?" என்ற சுய அறிவை கல்வி மூலமாக வழங்குவதற்கு தவறி வருகிறோம். மனிதனின் தோலின் நிறம் மற்றும் வெளிப்புற உடலமைப்பு மாறுபாடுகள் நீண்டகால உயிரியல் தகவமைப்பே தவிர, உயர்வு தாழ்வு அல்ல. "கருவறையும் ஒன்றே! கல்லறையும் ஒன்றே!" என்பதற்கிணங்க மனித இனம் பிறப்பிலும் இறப்பிலும் சமமானது. மனித உடல் என்பது இதயம், நுரையீரல், சிறுநீரகம் உள்ளிட்ட பல உள்ளுறுப்புகளின் பரஸ்பர ஒத்துழைப்பால் இயங்கும் கூட்டமைப்பாகும். இயற்கையின் உணவுச் சுழற்சி, தாவர-விலங்கு வேதியியல் தொடர்பு மற்றும் அறுசுவையின் அறிவியலைப் புரிந்து கொண்டு சமச்சீர் உணவை உண்பதே உடலின் வேதியியல் சமநிலையைப் பேணி, "ஆயுசு நூறு" ஆயுளை நல்கும். தொழில்நுட்பக் கல்வி என்பது "சித்திரம்"; சுய அறிவும் மனிதநேயமும் அதைத் தாங்கும் "சுவர்". இளைஞர்கள் 18 வயதில் சுய அறிவையும், உலகளாவிய மனிதநேயத்தையும் பெறுவதை நாட்டை ஆள்பவர்களும் கல்வி அமைப்புகளும் உறுதி செய்ய வேண்டும். இத்தகைய மெய்யியல் பார்வையை இளைஞர்களிடம் விதைப்பதே வன்முறையற்ற, போர்களற்ற அமைதி உலகை உருவாக்க வழிவகுக்கும்.

### *Abstract*

In an era characterized by exponential technological progress and artificial intelligence, global society continues to experience widespread conflict, systemic discrimination, and existential anxiety. Modern education overwhelmingly prioritizes technical competence while neglecting fundamental self-realization ("Who am I?"), humanistic ethics, and biological self-awareness. This interdisciplinary study proposes a comprehensive pedagogical and social framework titled the "Philosophy of Humanity" (மானுடத்தின் மெய்யியல்).

Grounding its analysis in classical literature, evolutionary biology, physiological cooperation, and dietary biochemistry, the paper presents four key pillars:

Evolutionary Equality: Skin pigmentation and morphological differences are demonstrated to be biological adaptations (melanin distribution relative to UV radiation) rather than indicators of racial hierarchy, reinforcing the absolute equality of all human beings from birth to death.

Organ-Based Interdependence: The human body is analyzed as a cooperative community of internal organs (heart, lungs, kidneys, liver) that survive through mutual harmony, offering a physiological blueprint for societal cooperation.

Biochemical Balance and Nutrition: Examining the digestive limitations of the human gastrointestinal tract, the study emphasizes how a balanced, "six-taste" diet maintains cellular homeostasis and promotes longevity (Ayusu Nooru).

Pedagogical Metaphors: Utilizing the metaphors of "The Wall and the Portrait" (where self-awareness is the supporting wall for technical skills) and "The Clean Vessel" (purity of intent in leadership), the study advocates a mandatory educational intervention at age 18 to cultivate universal empathy.

The study concludes that embedding self-realization into higher education is essential for building a non-violent, sustainable, and peaceful global community.



**Keywords:** Philosophy of Humanity; Evolutionary Equality; Melanin Adaptation; Physiological Interdependence; Biochemical Balance; Humanistic Pedagogy; Self-Realization; Global Peace

**How to cite this article:** காளிதாஸ், ச., & சடகோபன், த. வ. (2026). மானுடத்தின் மெய்யியல்: சுய அறிவும், இயற்கைச் சமநிலையும், உலக அமைதிக்கான கல்வியும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*. https://doi.org/10.63300/tm12052026.17

**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

## முன்னுரை

நவீன மானுட நாகரிகம் இன்றைக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பிரம்மாண்டமான பாய்ச்சலையும் மகத்தான சாதனைகளையும் எட்டியுள்ளது. உயிரற்ற கணினிகள், மின்னணு சாதனங்கள், விண்வெளி ஓடங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற அதிநவீனத் தொழில்நுட்பங்களை மிக நுணுக்கமாகவும் நுட்பமாகவும் கையாளத் தெரிந்துள்ள மனிதன், துரதிர்ஷ்டவசமாக உயிருள்ள தன் சொந்த உடலின் இயக்கம், வாழ்வின் மெய்யான நோக்கம் மற்றும் இயற்கை வகுத்துள்ள பெருவிதி ஆகியவற்றைப் புரிந்துகொள்வதில் போதிய கவனமும் அக்கறையும் செலுத்துவதில்லை. செலுத்துவதற்கான வழிகாட்டுதலும் இல்லை. தன் கைபேசியின் மென்பொருளை உடனுக்குடன் புதுப்பிக்கும் மனிதன், தன்

உடலியல் தேவைகளையும் மனதின் போக்கையும் உணரத் தவறுவது தற்கால வாழ்வியலின் மிகப்பெரிய முரண்பாடாகும்.

"கருவறையும் ஒன்றே! கல்லறையும் ஒன்றே!" எனும் என்றெனறும் மாறாத உலகப் பொது உண்மையின்படி, பூமியில் தோன்றிய அனைத்து மனிதர்களும் ஒரே மூலத்தில் பிறந்து, ஒரே முடிவை நோக்கிப் பயணிப்பவர்களே ஆவர். நிலவியல், காலநிலை மற்றும் சூரிய ஒளியின் அடர்த்திக்கு ஏற்ப உடலின் மெலனின் நிறமி அளவுகளில் மாறுபாடுகள் ஏற்பட்டு வெளிப்புறத் தோற்றம் மாறியதே தவிர, மனித இனம் உடற்கூறியல் ரீதியாகவும் உயிரியல் ரீதியாகவும் முற்றிலும் ஒன்றே. இருப்பினும், வரலாற்று நெடுகிலும் மனிதன் ஆறாம் அறிவைப் பெற்றதன் நோக்கம் புரியாமல், எல்லைகள், மதங்கள், இனங்கள் மற்றும் சித்தாந்தங்களின் பெயரால் தங்களுக்குள் பிரிவினைகளை உருவாக்கி, போர்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட்டு ரத்தம் சிந்துவது மனித நாகரிகத்திற்கு நேர்ந்த வரலாற்றுப் பிழையாகும்.

மனித உடல் என்பது இதயம், நுரையீரல், சிறுநீரகம், கணையம், கல்லீரல் போன்ற பல உள்ளுறுப்புகள் பரஸ்பரம் ஒன்றையொன்று சார்ந்து, பேரமைதியோடும் ஒத்துழைப்போடும் இயங்கும் ஒரு மாபெரும் கூட்டுச் சமூகமாகும். இவற்றில் ஓர் உறுப்பு தன் இயக்கத்தை நிறுத்தினாலும் ஒட்டுமொத்த உயிரும் உடனடியாக முடிவுக்கு வந்துவிடுகிறது. இத்தகைய அற்புத உடலமைப்பைக் கொண்ட மனிதன், இயற்கை அமைத்துள்ள உணவுப் பின்னல், தாவர-விலங்கு வேதியியல் தொடர்பு மற்றும் அறுசுவை உணவின் அறிவியல் நுட்பங்களை உணர்ந்து வாழ வேண்டியது அவசியமாகும்.

இன்றைய கல்வி அமைப்புகளும் நாட்டை வழிநடத்துவோரும் வெறும் தொழில்நுட்ப அறிவையும் வேலைவாய்ப்புக்கான பயிற்சிகளையும் மட்டுமே போதித்து "சித்திரம்" வரைவதில் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால், அச்சித்திரத்தைத் தாங்கிப் பிடிக்கும் "சுவர்" போன்ற சுய அறிவையும், மனத்தூய்மையையும், அகில உலக மனிதநேயத்தையும் இளைஞர்களிடம் விதைக்கத் தவறுகிறார்கள். ஒரு மனிதன் 18 வயதை அடையும் தருவாயில் "தான் யார்? தன் உடலின் ஆரோக்கியத்திற்கான தேவை என்ன? இயற்கைக்கும் தனக்குமான தொடர்பு என்ன?" என்பதை உணரும் கல்வி முறையை நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இக்கட்டுரையானது மனிதனின் உயிரியல் பரிணாமம், உள்ளுறுப்புகளின் வேதியியல் சமநிலை, இயற்கைச் சுழற்சி, உவமைகள் வழியிலான கல்விச் சிந்தனை மற்றும் சுய அறிவின் மூலம் உலக அமைதியை எட்டும் வழிகளை ஒன்றிணைத்து, போர்களற்ற, அமைதியான மனித சமூகத்தை உருவாக்குவதற்கான ஒரு முழுமையான வாழ்வியல் மெய்யியலைத் தொகுத்து முன்வைக்கிறது.

1. **இலக்கிய ஆய்வுகள்**

**1.1திருக்குறள் (வள்ளுவர் - அறத்துப்பால்&பொருட்பால்)**

**மையக் கருத்து:** பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் மற்றும் மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு.

**ஆய்வுச் சான்று:** வள்ளுவர் *"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"* (குறள் 322) என்பதில், மனிதன் தன் தேவையைத் தாண்டி பிற உயிர்களையும் காக்க வேண்டும் எனும் ஆறாம் அறிவின் முதன்மைக் கடமையை உணர்த்துகிறார். மேலும், *"அற்றால் அளவறிந்து உண்க"* (குறள் 943) என்பதில் உடலின் செரிமான அளவு மற்றும் வேதியியல் தேவை அறிந்து உண்பதே நோயற்ற "ஆயுசு நூறு" வாழ்வுக்கு வழி வகுக்கும் என்பதை நிறுவுகிறார்.

**1.2திருமந்திரம் (திருமூலர் - உடம்பார் அழியின் உயிரார் அழிவர்)**

**மையக் கருத்து:** உடலின் மகத்துவமும் உள்ளுறுப்புகளின் பாதுகாப்பும்.

**ஆய்வுச் சான்று:** *"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்... உடம்பினைப் போற்றும் உபாயம் அறிந்தே"* எனும் திருமூலரின் பாடல், மனித உடல் என்பது ஆன்மாவும் உயிரும் வாழும் வீடாகும் என்பதை வலியுறுத்துகிறது. உடலின் உள்ளுறுப்புகள் ஒவ்வொன்றும் சீராக இயங்கினால் மட்டுமே உயிர் தங்கும் எனும் உடலியல் வேதியியல் உண்மையை இத்திருமந்திர ஆய்வு உறுதி செய்கிறது.

**1.3புறநானூறு (புறநானூறு189 -தென்கடல் வளாகத்துப் பொதுமை இன்றி)**

**மையக் கருத்து:** உணவின் சமத்துவமும் மனிதனின் அடிப்படைத் தேவையும்.

**ஆய்வுச் சான்று:** மதுரை நக்கீரனார் எழுதிய *"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே... செல்வத்துப் பயனே ஈதல்"* எனும் பாடல், மனிதன் பேரரசானாலும் அவனது உடலியல் தேவை (உணவு, உடை) ஒன்றுதான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. எல்லைகளும் அதிகாரமும் போர்களும் மனிதனின் அறியாமையால் உருவானவையே தவிர, உடலின் ஆரோக்கியத்திற்கான தேவை அனைவருக்கும் சமமே என்பதை இப்பாடல் சான்றாகிறது.

**1.4கணியன் பூங்குன்றனார் (புறநானூறு192 -யாதும் ஊரே யாவரும் கேளிர்)**

**மையக் கருத்து:** உலகளாவிய மனிதநேயமும் எல்லைகளற்ற சமத்துவமும்.

**ஆய்வுச் சான்று:** *"யாதும் ஊரே யாவரும் கேளிர்... தீதும் நன்றும் பிறர்தர வாரா"* என்னும் வரிகள், மனித இனம் முழுவதும் ஒரே குடும்பம் (Global Family) என்பதையும், மனிதனின் நன்மையும் தீமையும் அவனது சொந்த மனப்பாங்கினாலும் சுய அறிவினாலுமே விளைகின்றன என்பதையும் நிறுவுகிறது. இது "கருவறையும் ஒன்றே! கல்லறையும் ஒன்றே!" எனும் இக்கட்டுரையின் சமத்துவக் கோட்பாட்டிற்கு வலு சேர்க்கிறது.

**1.5ஔவையாரின் மூதுரை&கொன்றை வேந்தன்**

**மையக் கருத்து:** கல்வியின் நோக்கம் மற்றும் ஒழுக்கத்தின் அவசியம்.

**ஆய்வுச் சான்று:** *"சுவரில்லாமற் சித்திரம் எழுத முடியாது"* என்னும் பழமொழியும், ஔவையாரின் *"ஓதுவது ஒழியேல்"*, *"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"* போன்ற அறநெறிகளும் கல்வியின் முதன்மை நோக்கம் தொழில் திறன் (சித்திரம்) மட்டுமல்ல, மனிதநேயமும் நற்பண்புகளுமே (சுவர்) என்பதை உணர்த்துகின்றன.

**1.6 தொல்காப்பியம் (பொருளதிகாரம் - உயிரினங்களின் அறிவுப் பகுப்பு)**

**மையக் கருத்து:** ஆறாம் அறிவின் சிறப்பும் பகுத்தறிவும்.

**ஆய்வுச் சான்று:** தொல்காப்பியர் *"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே... ஆறறி வதுவே அவற்றோடு மனனே"* என உயிரினங்களை ஒன்று முதல் ஆறறிவு வரை வரிசைப்படுத்துகிறார். மனத்தால் சிந்திக்கும் ஆறாம் அறிவு பெற்ற மனிதன், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் இயல்பைப் புரிந்து கொண்டு உலகைப் பாதுகாக்க வேண்டும் எனும் பரிணாமக் கருத்திற்கு இது அடிப்படையாகிறது.

**1.7சித்தர் பாடல்கள் (பத்திரகிரியார்&சிவவாக்கியார் - உடம்பின் இயக்கம்)**

**மையக் கருத்து:** "நான் யார்?" எனும் சுய அறிவும் பஞ்சபூத வேதியியலும்.

**ஆய்வுச் சான்று:** *"கறந்த பால் முலை புகா கத திறந்த பூவினி மணமுங் காயின் முதற்புகா"* என உடலின் மாற்றங்களையும், பஞ்சபூதங்களின் கூட்டமைப்பான உடலின் தத்துவத்தையும் சித்தர்கள் விளக்குகின்றனர். வெளிப்புறப் பொருள்களைத் தேடுவதை விட, "நான் யார்?" எனத் தன்னுள் தேடுவதே மெய்யான முக்தி/தெளிவு என்பதை இவர்கள் பாடல்கள் மெய்ப்பிக்கின்றன.

**1.8பாரதியார் கவிதைகள் (சமுதாயப் பார்வை&உலக அமைதி)**

**மையக் கருத்து:** மானுடச் சமத்துவமும் போரற்ற உலகமும்.

**ஆய்வுச் சான்று:** *"சாதி இரண்டொழிய வேறில்லை"* என்றும், *"தனி ஒருவனுக்கு உணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்"* என்றும் பாடிய பாரதி, மனித குலத்தின் ஒற்றுமையையும், பசியற்ற அமைதிச் சமூகத்தையும் வலியுறுத்துகிறார். அறிவியலும் தொழில்நுட்பமும் மனிதகுலத்தின் வளர்ச்சிக்கும் அமைதிக்குமே பயன்பட வேண்டும் என்பது பாரதியின் கனவாகும்.

**1.9சார்லஸ் டார்வின் - பரிணாம வளர்ச்சித் தத்துவம் (Origin of Species)**

**மையக் கருத்து:** உயிரியல் தகவமைப்பும் இயற்கைத் தேர்வும் (Biological Adaptation).

**ஆய்வுச் சான்று:** டார்வினின் பரிணாமக் கோட்பாட்டின்படி, உயிரினங்களின் உடலமைப்பு மற்றும் தோலின் நிறம் ஆகியவை வாழும் சூழல் மற்றும் காலநிலைக்கு

ஏற்ப மாறும் "இயற்கைத் தேர்வு" (Natural Selection) ஆகும். மனிதர்களின் நிற வேறுபாடுகள் மெலனின் தகவமைப்பே தவிர, உயர்வு தாழ்வு அல்ல எனும் உயிரியல் உண்மையை டார்வினியம் உறுதிப்படுத்துகிறது.

**1.10 யுனெஸ்கோ சாசனம் (UNESCO Constitution - Peace in the Minds of Men)**

**மையக் கருத்து:** கல்வியும் உலக அமைதியும்.

**ஆய்வுச் சான்று:** *"போர்கள் மனிதர்களின் மனங்களிலேயே தொடங்குகின்றன; எனவே அமைதிக்கான அரண்களும் மனிதர்களின் மனங்களிலேயே கட்டப்பட வேண்டும்"* (*"Since wars begin in the minds of men, it is in the minds of men that the defences of peace must be constructed"*) என்னும் யுனெஸ்கோ அமைப்பின் கோட்பாடு, 18 வயதில் இளைஞர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய "சுய அறிவும் மனிதநேயமுமே" உலக அமைதிக்கு ஒரே வழி எனும் இக்கட்டுரையின் இறுதி முடிவை சர்வதேச அளவில் உறுதி செய்கிறது.

1. **ஆய்வின் நோக்கங்கள்**

- **பரிணாமச் சமத்துவத்தை நிறுவுதல்:** "கருவறையும் ஒன்றே! கல்லறையும் ஒன்றே!" என்ற தத்துவத்தின் அடிப்படையில், மனிதர்களின் தோலின் நிறம் மற்றும் வெளிப்புற உடலமைப்பு மாறுபாடுகள் காலநிலை சார்ந்த உயிரியல் தகவமைப்புகளே (Melanin Adaptation) தவிர உயர்வு தாழ்வு அல்ல என்பதை உயிரியல் பூர்வமாக நிறுவுதல்.
- **சிந்தனைப் புலம்பெயர்வின் தாக்கத்தைக் கண்டறிதல்:** மனித இனம் ஒரே மூலத்தில் தோன்றினாலும், நிலவியல் மற்றும் சிந்தனைவழிப் புலம்பெயர்வால் உருவான சிந்தனை வேறுபாடே (Diversity of Thought) அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் செயற்கை நுண்ணறிவு (AI) வரையிலான வளர்ச்சிக்கும் அடிப்படை என்பதை ஆராய்தல்.
- **உள்ளுறுப்புகளின் பரஸ்பர ஒத்துழைப்பை விளக்குதல்:** இதயம், நுரையீரல், சிறுநீரகம், கணையம், மண்ணீரல், இரைப்பை போன்ற மனித உடலின் உள்ளுறுப்புகள் ஒன்றையொன்று சார்ந்து இயங்கும் கூட்டுச் சமூக அமைப்பையும், இதில் ஒரு உறுப்பின் சமநிலை குலைந்தாலும் ஒட்டுமொத்த இயக்கமும் முடங்கும் உடலியல் உண்மையை விளக்குதல்.
- **அறுசுவை உணவின் வேதியியல் சமநிலையை வலியுறுத்துதல்:** மனிதனின் ஜீரண மண்டல எல்லைகளைப் புரிந்து கொண்டு, தாவர-விலங்கு உணவுச் சுழற்சி மற்றும் அறுசுவை உணவின் மூலம் உடலின் வேதியியல் சமநிலையைப் பேணி "ஆயுசு நூறு" ஆரோக்கிய வாழ்வை அடையும் வழிகளை ஆராய்தல்.
- **சுவரும் சித்திரமும் உவமை வழி கல்வி முறையை மறுவரையறை செய்தல்:** தொழில்நுட்பக் கல்வியை "சித்திரம்" எனவும், சுய அறிவு மற்றும்

மனிதநேயத்தை அதைத் தாங்கும் "சுவர்" எனவும் உருவகப்படுத்தி, சுவரற்ற சித்திரம் போன்ற மனச்சான்றற்ற தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆபத்தை உணர்த்துதல்.

- **18வயது இளைஞர்களுக்கான சுய அறிவு வழிகாட்டுதலை முன்மொழிதல்:** 18 வயதை அடையும் இளைஞர்களுக்குக் கல்வியாளர்கள் மற்றும் ஆள்பவர்கள் வெறும் தொழில் திறன்களை மட்டும் போதிக்காமல், "நான் யார்?" என்ற சுய அறிவையும், அகில உலக மனிதநேயத்தையும் புகட்டுவதன் மூலம் போர்களற்ற உலக அமைதியை உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொள்ளுதல்.

1. **மானுடத்தின் மெய்யியல்**

### 3.1 உயிரியல் தகவமைப்பும் மனித இனத்தின் சமத்துவமும்

மனித இனம் பாலூட்டி வகைகளில் பரிணாமத்தின் உச்சமாகத் திகழ்கிறது. வெவ்வேறு நிலப்பரப்புகளில் வாழும் மனிதர்களின் தோலின் நிறம் மற்றும் வெளிப்புற உடலமைப்பில் காணப்படும் வேறுபாடுகள் உயிரியல் தகவமைப்பின் (Biological Adaptation) விளைவே ஆகும்.

- **மெலனின் நிறமியும் சூரிய ஒளியும்:** வெப்ப மண்டலத்தில் சூரியனின் புறஊதாக் கதிர்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள மனித உடலில் மெலனின் அதிகளவில் சுரக்கிறது. குளிர் பிரதேசங்களுக்குப் புலம்பெயர்ந்த மனிதர்களுக்குச் சூரிய ஒளியிலிருந்து வைட்டமின்-D சத்தைப் பெற மெலனின் சுரப்பு குறைந்து, தோலின் நிறம் வெளிறி மாறத் தொடங்கியது.
- **பல்லாயிரம் ஆண்டுப் பயணம்:** இத்தகைய மரபணு மாற்றம் (Genetic Mutation) இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளில் நிகழ்ந்துவிடாது. இதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளும் நூற்றுக்கணக்கான தலைமுறைகளும் தேவைப்படுகின்றன.
- **சமத்துவ நெறி:** "கருவறையும் ஒன்றே! கல்லறையும் ஒன்றே!" என்பதற்கிணங்க, மனிதர்கள் அனைவரும் ஒரே மூலத்தில் தோன்றி ஒரே முடிவை எய்பவர்களே. பிறப்பிலும் இறப்பிலும் சமமான மனிதர்களிடையே நிறம், இனம், நாடு ஆகியவற்றைக் கொண்டு உயர்வு தாழ்வு கற்பிப்பது இயற்கையின் நியதிக்கே முரணானது.

### 3.2 கருவறைத் தொடக்கமும் சிந்தனைவழிப் புலம்பெயர்வும்

மனிதன் தோன்றிய இடம் ஒன்றே என்றாலும், காலப்போக்கில் இயற்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், தன் வாழ்வாதாரத்தைப் பெருக்கவும் பூமி முழுவதும் புலம் பெயரத் தொடங்கினான். இப்புலம்பெயர்வு வெறும் உடல் சார்ந்த இடப்பெயர்ச்சி மட்டுமல்ல; அவனது ஆறாம் அறிவின் சிந்தனைப் பரிணாமமுமாகும்.

- **இயற்கைப் புலம் பெயர்வும் தகவமைப்பும்:** மனிதன் தான் படைக்கப்பட்ட மூல இடத்திலிருந்து வெவ்வேறு காலநிலைகள், வெப்பநிலைகள் மற்றும் புவியியல் பகுதிகளை நோக்கி நகர்ந்தபோது, அவனது உடலியல் அமைப்பு இயற்கைக்கேற்ப மாறியது. மெலனின் மாற்றமும் தோலின் நிற வேறுபாடுகளும் இத்தகைய நீண்டகால நிலவியல் புலம்பெயர்வின் உயிரியல் பதிவுகளே ஆகும்.
- **சிந்தனை வழி இடப்பெயர்வு:** வெறும் உணவுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் இடம் பெயர்ந்த மனிதன், தன் பகுத்தறிவின் துணையால் "சிந்தனை வழிப் புலம்பெயர்வை" அடைந்தான். அதாவது, கருவறையில் ஒன்றுபோலத் தொடங்கும் மனித மனம், சூழ்நிலை மற்றும் அனுபவங்களின் காரணமாக வெவ்வேறான சிந்தனைப் பாதைகளில் பயணிக்கத் தொடங்குகிறது.
- **கண்டுபிடிப்புகளும் பொதுமைப் பண்பும்:** இத்தகைய சிந்தனை வேறுபாடே புதிய கருவிகள், நாகரிகங்கள், அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) வரையிலான கண்டுபிடிப்புகளுக்கு விதையிட்டது. மனிதன் புலம் பெயர்ந்து நாடுகளையும் எல்லைகளையும் உருவாக்கினாலும், அவனது சிந்தனையால் உதித்த கண்டுபிடிப்புகளுக்கும் பொருட்களுக்கும் எல்லைகளோ, மதமோ, இனமோ கிடையாது.

### 3.3 உள்ளுறுப்புகளின் கூட்டுச் சமூகமும் மனித மனத்தின் போலிப் பிம்பமும்

மனித உடலின் வெளிப்படை வடிவம் ஒன்றாக இருந்தாலும், அவனுள் **இதயம்,நுரையீரல்,சிறுநீரகம்,கணையம்,மண்ணீரல்,இரைப்பை** எனப் பல உயிர்கள் ஒன்றையொன்று சார்ந்து, முழுமையான ஒத்துழைப்புடன் வாழ்கின்றன.

- **உள்ளுறுப்புகளின் ஒத்துழைப்பு:** இந்த உள்ளுறுப்புகளில் ஏதேனும் ஓர் உயிர் ஒத்துழைக்க மறுத்துத் தன் இயக்கம் துறந்தாலும், உடலின் ஒட்டுமொத்தக் கூட்டமைப்பும் முடங்கி, மனிதன் உடனடி இறப்பு நிலைக்குச் சென்றுவிடுகிறான்.
- **செரிமான எல்லையும் வன்முறையும்:** தாவரங்களின் இலை, தழைகளை நேரடியாகச் செரிக்கும் ஆற்றல் மனிதனின் ஜீரண மண்டலத்திற்கு இல்லை. இந்த உடலியல் எல்லையையும், உலகினைப் பாதுகாப்பதற்காகத் தனக்கு அளிக்கப்பட்ட ஆறாவது அறிவையும் சரியாக உணராததால், மனிதன் தன் தேவைகளுக்காகவும் அதிகாரத்திற்காகவும் காலகாலமாக இரத்தம் சிந்தி வாழ்கிறான்.
- **போலிப் பிம்பமும் ஆட்டு மந்தை வாழ்க்கையும்:** பிற மிருகங்களைப் போல இயற்கையோடு ஒன்றி, சந்தோஷமாகவும் மன அமைதியோடும் வாழ வேண்டிய மனித இனம், சுய அறிவை அடையாமல் "மாற்றம் ஒன்றே மாறாதது" என்னும் போலியான தத்துவப் பிம்பத்திற்குள் தங்களை முடக்கிக் கொள்கிறது.

போர்களினாலும், பல்வேறு மன உலைச்சல்களினாலும் அவதிப்பட்டு, இயற்கையின் விதிக்குட்பட்டு இனப்பெருக்கம் மட்டும் செய்து ஆட்டு மந்தையைப் போல வாழ்க்கை நடத்தி வருவது மிகுந்த வேதனைக்குரியது.

### 3.4 ஆறாம் அறிவின் கடமையும் "ஆயுசு நூறு" தத்துவமும்

இயற்கையில் மனிதன் ஆறாவது அறிவைப் பெற்ற இறுதி உயிரினமாவான். இந்தச் சிறப்பு ஆற்றல் ஆதிக்கம் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டதல்ல.

- **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்:** வள்ளுவரின் *"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"* என்னும் குறளின்படி, தன் ஆறாம் அறிவைக் கொண்டு தன்னையும் தன்னைச் சார்ந்த அனைத்து உயிரினங்களையும் அரவணைத்துப் பாதுகாப்பதே மனிதனின் முதன்மைக் கடமையாகும்.
- **மூன்று தலைமுறைப் பாதுகாப்பு:** பெரும்பாலான உயிரினங்கள் தங்கள் வாரிசை ஒரே ஒரு தலைமுறைக்கு மட்டுமே பாதுகாத்து வளர்க்கும் ஆயுளைப் பெற்றுள்ளன. ஆனால் மனிதன் மட்டுமே, தன் அனுபவத்தையும் அறிவையும் அடுத்தடுத்த மூன்று தலைமுறைகளுக்குக் கடத்திப் பராமரிக்கும் "ஆயுசு நூறு" வாழ்நாளைப் பெற்றுள்ளான்.
- **மிருக குணத்திலிருந்து விடுதலை:** தன்னைப் வேட்டையாடி உண்ணும் இயற்கை எதிரிகள் (Prey-Predator chain) மனிதனுக்கு இல்லாத சூழலில், மனிதனே மனிதனைச் சூறையாடுவதும் போரிடுவதும் அவனது பகுத்தறிவுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும்.

### 3.5 இயற்கைச் சுழற்சியும் உணவுப் பின்னலும்

இயற்கையின் பேராற்றலையும் அதன் தாராளமான உற்பத்தியையும் புரிந்து கொள்ளும்போது மனித மனதில் பேராசையும் வன்முறையும் அகலும்.

- **மீன்களின் இனப்பெருக்கச் சுழற்சி:** கடலிலும் நீர்நிலைகளிலும் பல்லாயிரக்கணக்கான முட்டையிட்டுப் பொரிக்கும் மீன்கள், தங்கள் இனப்பெருக்கக் காலம் வரை நீரின் அடியில் பாதுகாப்பாக வாழ்கின்றன. அக்காலம் முடிந்த பின் இயற்கைச் சுழற்சியின் (Food Cycle) அங்கமாகப் பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் உணவாகின்றன. இனப்பெருக்கம் செய்து முடித்த உயிரினங்களை உணவாக்கிக் கொள்வது இயற்கையின் சுழற்சிக்கு உட்பட்டதே.
- **தாவர வேதியியலும் ஊட்டச்சத்தும்:** தாவரங்கள் ஒளிச்சேர்க்கையின் போது வேர் வழியே நீருடன் சேர்த்து மண்ணில் புதைந்துள்ள தாதுக்களையும் வேதியியல் மூலக்கூறுகளையும் உறிஞ்சுகின்றன. இவை காய், கனிகளில்

சேமிக்கப்பட்டு விதைகளுக்குப் பாதுகாப்பு அரணாகச் செயல்படுவதுடன், பிற உயிரினங்களுக்கும் உணவாகின்றன.

- **மறைமுகச் சத்துப் பரிமாற்றம்:** அருகம்புல் போன்ற புற்களிலுள்ள கடினமான செல்லுலோஸை மனிதனால் நேரடியாகச் செரிக்க முடியாது. ஆனால், ஆடுகள் போன்ற விலங்குகள் அதை உட்கொண்டு, மனித உடலுக்குத் தேவையான வேதியியல் மூலக்கூறுகளைத் தம் தசையிலும் புரதத்திலும் எளிமைப்படுத்தித் தருகின்றன. இத்தகைய மறைமுக உணவுச் சங்கிலியை உணர்ந்து உணவைத் தேர்ந்தெடுப்பதே மூதாதையர் காட்டிய வழியாகும்.

### 3.6 உடலின் வேதியியல் சமநிலையும் அறுசுவையின் அறிவியலும்

மனித உடலின் உள் உறுப்புகளான இதயம், சிறுநீரகம், நுரையீரல், கல்லீரல், கணையம், எலும்புகள் போன்றவை ஒரே மாதிரியான வேதியியல் மூலக்கூறுகளால் இயங்குபவை அல்ல.

- **உறுப்புகளின் பிரத்யேகத் தேவை:** ஒவ்வொரு உள்ளுறுப்பிற்கும் குறிப்பிட்ட தாதுக்களும் வேதியியல் கூட்டுப்பொருட்களும் தேவைப்படுகின்றன.
- **அளவறிந்து உண்ணுதல்:** சாப்பாடு என்ற பெயரில் ஒரே மாதிரியான தானியங்களையும் உணவுகளையும் உண்பது உடலின் நுண் ஊட்டச்சத்துச் சமநிலையைக் குலைத்து நோயை உண்டாக்கும். குறிப்பிட்ட சத்துக்கள் அறவே கிடைக்காமல் போவதும், அல்லது ஒரே சத்து அளவுக்கு அதிகமாக உடலின் சேர்வதும் திடீர் உயிரிழப்பிற்கு வழிவகுக்கும்.
- **அறுசுவையின் மகத்துவம்:** இனிப்பு, புளிப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு, உவர்ப்பு எனும் அறுசுவைகளும் வெவ்வேறு வேதியியல் சேர்மங்களின் கலவையாகும். அறுசுவை உணவைச் சமச்சீராக உட்கொள்ளும்போது உடலின் அனைத்து உள்ளுறுப்புகளும் ஒன்றையொன்று சார்ந்து சரியாக இயங்கி, "ஆயுசு நூறு" ஆயுளைத் தரும்.

### 3.7 உலக அமைதிக்கான கல்வி: உவமைகள் வழியிலான மெய்யியல்

இன்றைய உலகம் இளைஞர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வியை மட்டுமே முதன்மையாகப் போதிக்கிறது. ஆனால், மனிதநேயமும் சுய அறிவும் இணையாத தொழில்நுட்பம் ஆபத்தானது.**3.7.1 உவமை1:சுவரும் சித்திரமும்**

**"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்."**

**சித்திரம் (தொழில்நுட்பக் கல்வி):** வண்ணமயமான சித்திரம் என்பது மனிதன் கற்கும் தொழில்நுட்பக் கல்வி, திறன்கள் மற்றும் உலகியல் அறிவு.

**சுவர் (சுய அறிவும் மனிதநேயமும்):** சித்திரத்தைத் தாங்கி நிற்கும் சுவர்தான் மனிதனின் சுய அறிவு, உடல் ஆரோக்கியம், மற்றும் மனிதநேயம்.

**பாடம்:** எல்லோரா குகை ஓவியங்கள் பாறை உறுதியாக இருந்ததால் நிலைத்து நிற்பது போல, மனிதனிடம் சுய அறிவும் நற்பண்புகளும் இருக்கும்போதுதான் அவன் கற்ற கல்வி உலகம் போற்றும் பயனைத் தரும். சுவரற்ற சித்திரம் போல, மனச்சான்றற்ற தொழில்நுட்பம் மனிதகுலத்தைச் சரிவிற்கே கொண்டு செல்லும்.

**3.7.2 உவமை2:பாத்திரத்தின் சுத்தமும் அம்மாவின் மனசும்**

**"சுத்தம் சோறு போடும்."**

**சுத்தமான பாத்திரம் (உள்ளத் தூய்மை):** தரமான காய்கறிகள் இருந்தாலும், சமைக்கும் பாத்திரம் அசுத்தமாக இருந்தால் உணவு நஞ்சாவது போல; எவ்வளவு பெரிய பட்டங்களும் அறிவும் இருந்தாலும், மனிதனின் உள்ளத்தில் பேராசையும் வன்முறையும் இருந்தால் அவனது அறிவு சமூகத்திற்குப் பேரழிவையே தரும்.

**அம்மாவின் மனசு (அன்பும் கருணையும்):** சமைப்பவரின் அன்பான மனநிலை உணவைச் சுவையாக்குவது போல, நாட்டை ஆள்பவர்களும் கல்வியாளர்களும் "அன்னையின் மனத்தோடு" சுயநலமின்றி அன்பையும் மனிதநேயத்தையும் விதைக்க வேண்டும்.

**3.8 18வயதில் உணர வேண்டிய "நான் யார்?"என்னும் மெய்யியல்**

சிந்தனை வேறுபாடே புதிய கண்டுபிடிப்புகளுக்கும் நாகரிக வளர்ச்சிக்கும், செயற்கை நுண்ணறிவு (AI) வரையிலான முன்னேற்றத்திற்கும் காரணமாகும். ஒரு மனிதனின் சிந்தனையால் கண்டுபிடிக்கப்படும் பொருட்களுக்கு நாடு, மதம், இனம் என்ற பாகுபாடு கிடையாது.

ஆனால், அதே கண்டுபிடிப்புகளைப் பிரிவினைக்கும் போருக்கும் பயன்படுத்துவது அறியாமையாகும். எனவே, ஒவ்வொரு மனிதனும் 18 வயதை அடையும் தருவாயில்:

**"நான் யார்?"** என்ற தன் சுய நிலையை உணர வைக்கவேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட ஆறாம் அறிவின் நோக்கம் ஆதிக்கமல்ல, பாதுகாப்பே என்பதை அறிய வேண்டும். தன் உடலின் வேதியியல் தேவைகளையும், இயற்கைக்கும் தனக்குமான தொடர்பையும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டை வழிநடத்துவோரும் கல்வி அமைப்புகளும் இளைஞர்களுக்குப் வெறும் தொழில்நுட்பப் பயிற்சியை மட்டும் அளிக்காமல், இந்தச் சுய அறிவையும் மனிதநேயத்தையும் கற்பிக்க முன்வர வேண்டும்.

1. **கண்டறிதல்கள் மற்றும் கலந்துரையாடல்கள்**

இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட முதன்மையான தரவுகளும், அவற்றின் அடிப்படையில் பெறப்பட்ட தத்துவார்த்த மற்றும் உயிரியல் ரீதியான

கலந்துரையாடல்களும் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன:**4.1 பரிணாமச் சமத்துவமும் உயிரியல் தகவமைப்பும் (Evolutionary Equality & Adaptation)**

**கண்டறிதல்கள்**

மனிதர்களின் தோலின் நிற வேறுபாடுகள் என்பது பூகோள ரீதியான சூரிய ஒளியின் அடர்த்தி மற்றும் புறஊதாக் கதிர்களின் தாக்கம் சார்ந்த **மெலனின் (Melanin)நிறமியின் உயிரியல் தகவமைப்பே** தவிர, மரபணு ரீதியான உயர்வு தாழ்வு அல்ல.

மனித இனம் அனைத்தும் ஒரே பரிணாம மூலத்தில் தோன்றி, காலநிலை மற்றும் வாழ்விடத் தேவைகளுக்காகப் புலம் பெயர்ந்தவர்களே ("கருவறையும் ஒன்றே! கல்லறையும் ஒன்றே!").

**கலந்துரையாடல்**

வரலாற்று நெடுகிலும் தோலின் நிறம், இனம் மற்றும் தேசத்தின் பெயரால் மனிதர்களிடையே செயற்கையான பாகுபாடுகளும் ஆதிக்க மனப்பான்மையும் உருவாக்கப்பட்டுள்ளன. இருப்பினும், டார்வினிய பரிணாமக் கோட்பாடு மற்றும் நவீன மரபியல் ஆய்வுகள் கூற்றுப்படி, மனித இனம் முழுவதும் உயிரியல் ரீதியாகச் சமமானது. இக்கண்டறிதல், இனவாத அடிப்படையிலான போர் மற்றும் வன்முறைகளுக்கு அறிவியல் ரீதியான மறுப்பை வழங்கி, அகில உலகச் சமத்துவத்தை உறுதி செய்கிறது.**4.2 சிந்தனைப் புலம்பெயர்வும் அறிவியலின் பொதுமைத் தன்மையும் (Conceptual Migration & Universal Knowledge)**

**கண்டறிதல்கள்**

மனிதன் புவியியல் ரீதியாக இடம் பெயர்ந்ததோடு மட்டுமன்றி, அவனது ஆறாம் அறிவின் வாயிலாகச் **சிந்தனை வழிப் புலம்பெயர்வை (Conceptual Migration)** அடைந்தான்.

இச்சிந்தனை வேறுபாடே (Diversity of Thought) சக்கரம் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) வரையிலான அனைத்துக் கண்டுபிடிப்புகளுக்கும் காரணமாக அமைந்தது. ஒரு மனிதனின் சிந்தனையால் உருவாக்கப்படும் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் தொழிநுட்பப் பொருட்களுக்கும் நாடு, மதம், இனம் என எவ்வித எல்லைகளும் கிடையாது.

**கலந்துரையாடல்**

அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித குலத்தின் பொதுச் சொத்தாகும். ஆனால், எல்லைகளை வகுத்து நாட்டை ஆள்பவர்கள் இத்தகைய கண்டுபிடிப்புகளை எல்லைப் போர்களுக்கும் அதிகாரப் போட்டிகளுக்கும் பயன்படுத்துவது ஆறாம் அறிவின்

பேரறியாமையாகும். அறிவின் பொதுமைத் தன்மையை உணர்வதே உலக அமைதிக்கு முதல் படியாகும்.**4.3 உள்ளுறுப்புகளின் கூட்டுச் சமூகமும் உடலியல் ஒத்துழைப்பும் (Interdependence of Internal Organs)**

**கண்டறிதல்கள் (Findings)**

மனித உடல் என்பது தனித்த ஒரு வடிவமல்ல; இதயம், நுரையீரல், சிறுநீரகம், கணையம், மண்ணீரல், இரைப்பை போன்ற **உள்ளுறுப்புகளின் பரஸ்பர ஒத்துழைப்பால் (Interdependence)இயங்கும் ஒரு கூட்டுச் சமூகம்** ஆகும்.

இதில் எந்தவொரு குறிப்பிட்ட உள்ளுறுப்பு தன் இயக்கத்தை நிறுத்தினாலும், உடலின் ஒட்டுமொத்தக் கூட்டமைப்பும் முடங்கி மனிதன் இறப்பு நிலையை அடைகிறான்.

**கலந்துரையாடல்**

உடலின் உள்ளுறுப்புகள் தங்களுக்குள் எவ்வித அதிகாரப் போட்டியோ, பாகுபாடோ இன்றி ஒன்றை ஒன்று தாங்கிப் பிடித்து முழு ஒத்துழைப்புடன் வாழ்கின்றன. உடலின் இந்த உள்ளமைந்த கூட்டுச் சமூகத் தத்துவத்தை உணர்ந்த மனிதன், சமூக அளவிலும் சக மனிதர்களோடு முரண்படாமல் ஒத்துழைப்புடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.**4.4 உணவுச் சுழற்சியும் அறுசுவையின் வேதியியல் சமநிலையும் (Food Cycle & Biochemical Balance)**

**கண்டறிதல்கள்**

மனித ஜீரண மண்டலத்திற்குப் புற்கள் மற்றும் இலை-தழைகளின் செல்லுலோஸை நேரடியாகச் செரிக்கும் ஆற்றல் இல்லை. எனவே, தாவர-விலங்கு மறைமுக உணவுச் சங்கிலி இயற்கையின் தேவையாக அமைகிறது.

உடலின் ஒவ்வொரு உள்ளுறுப்பிற்கும் வெவ்வேறு விதமான தாதுக்களும் வேதியியல் கூட்டுப்பொருட்களும் தேவைப்படுகின்றன. இனிப்பு, புளிப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு, உவர்ப்பு எனும் **அறுசுவை உணவைச் சமச்சீராக உண்பதே** உடலின் வேதியியல் சமநிலையைப் பேணி "ஆயுசு நூறு" ஆரோக்கிய வாழ்வைத் தருகிறது.

**கலந்துரையாடல்**

ஒரே மாதிரியான உணவை உண்பது உடலின் நுண் ஊட்டச்சத்துச் சமநிலையைக் குலைத்து நோய்களை உண்டாக்கும். இயற்கையின் உணவுச் சுழற்சியையும் அறுசுவையின் வேதியியல் பின்னணியையும் புரிந்து கொண்டு உணவைத் தேர்ந்தெடுப்பதே நோயற்ற வாழ்விற்கும் நீண்ட ஆயுளுக்கும் அடிப்படையாகும்.**4.5 கல்வியின் மறுவரையறை: சுவரும் சித்திரமும் உவமை (Redefining Education: Wall & Portrait Metaphor)**

**கண்டறிதல்கள்**

தொழில்நுட்பக் கல்வி என்பது வண்ணமயமான **"சித்திரம்"**; அதைத் தாங்கி நிற்கும் சுய அறிவு, நற்பண்புகள் மற்றும் மனிதநேயம் ஆகியவையே **"சுவர்"**.

சமைக்கும் பாத்திரம் அசுத்தமாக இருந்தால் தரமான காய்கறிகளும் உணவும் நஞ்சாவது போல, சுய அறிவும் உள்ளத் தூய்மையும் அற்ற மனிதனிடம் இருக்கும் உயர் தொழில்நுட்ப அறிவு சமூகத்திற்குப் பேரழிவையே தரும்.

**கலந்துரையாடல்**

தற்போதைய கல்வி முறை சுவரைப் பற்றிய கவலையின்றி வெறும் சித்திரத்தை வரைவதிலேயே கவனம் செலுத்துகிறது. இதனால், தொழில்நுட்பத்தில் உச்சம் தொட்ட மனிதன், அறநெறியற்ற முறையில் பேராயுதங்களையும் வன்முறையையும் உருவாக்குகிறான். சுவரை (சுய அறிவு & மனிதநேயம்) பலப்படுத்திய பின்னரே சித்திரத்தை (தொழில்நுட்பக் கல்வி) வரைய வேண்டும் என்னும் கல்விச் சீர்திருத்தம் அவசியமாகிறது.**4.6 18வயதுப் பருவமும் உலக அமைதியும் (18-Year Educational Intervention & Global Peace)**

**கண்டறிதல்கள்**

மனிதன் 18 வயதை அடையும் பருவம் அவனது சுய அடையாளத்தையும் சமூகப் பார்வையையும் தீர்மானிக்கும் முதன்மையான காலகட்டமாகும்.

இப்பருவத்தில் "நான் யார்?", "என் உடலின் தேவை என்ன?", "இயற்கைக்கும் எனக்குமான தொடர்பு என்ன?" என்ற **சுய அறிவை (Self-Realization)** போதிப்பது வன்முறையற்ற சமூகத்தை உருவாக்கும்.

**கலந்துரையாடல்**

நாட்டை வழிநடத்துவோரும் கல்வி நிறுவனங்களும் 18 வயது இளைஞர்களுக்கு வெறும் வேலைவாய்ப்புக்கான பயிற்சிகளை மட்டும் அளிக்காமல், சுய அறிவையும் அகில உலக மனிதநேயத்தையும் கற்பித்தால், மனிதனே மனிதனைச் சூறையாடும் போக்கு மாறி, உலகில் போர்களற்ற அமைதிச் சூழல் இயல்பாகவே மலரும்.

1. **முடிவுரை மற்றும் பரிந்துரைகள்**

**முடிவுரை**

நவீன உலகம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பாய்ச்சலில் உச்சத்தை எட்டியிருந்தாலும், மனிதகுலம் போர், வன்முறை, இனப்பாகுபாடு மற்றும் மன உலைச்சல்களால் தொடர்ந்து அமைதியை இழந்து தவிப்பது ஒரு பெரும் வாழ்வியல் முரண்பாடாகும். இச்சவால்களுக்குத் தீர்வாக இவ்வாய்வு, மனித உடலின் அறிவியல்

இயக்கம், இயற்கையின் சமநிலை, மற்றும் மனிதநேயக் கல்வி ஆகியவற்றை ஒன்றிணைக்கும் ஒரு முழுமையான வாழ்வியல் மெய்யியலை முன்வைத்துள்ளது.

**இயற்கைச் சமத்துவமும் மானுட ஒருமைப்பாடும்:** "கருவறையும் ஒன்றே! கல்லறையும் ஒன்றே!" எனும் பேருண்மையின் படி, மனித இனம் முழுவதும் ஒரே மூலத்தில் பிறந்து ஒரே முடிவை நோக்கிப் பயணிப்பவர்களே. தோலின் நிறம் மற்றும் வெளிப்புற உடலமைப்பு மாறுபாடுகள் காலநிலை சார்ந்த உயிரியல் தகவமைப்புகளே (Melanin Adaptation) தவிர உயர்வு தாழ்வு அல்ல.

**உள்ளுறுப்புகளின் தத்துவம்:** மனித உடல் என்பது இதயம், நுரையீரல், சிறுநீரகம், கணையம், மண்ணீரல், இரைப்பை போன்ற பல உள்ளுறுப்புகளின் பரஸ்பர ஒத்துழைப்பால் இயங்கும் கூட்டுச் சமூகமாகும். உள்ளுறுப்புகளின் இந்த உள்சார்ந்த ஒத்துழைப்புத் தத்துவத்தை மனிதன் உணர்ந்து, சமூக அளவிலும் பரஸ்பர அன்போடும் ஒத்துழைப்போடும் வாழ வேண்டும்.

**கல்வியின் மறுவரையறை:** "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" எனும் பழமொழி உணர்த்துவது போல, தொழில்நுட்பக் கல்வி என்பது "சித்திரம்"; சுய அறிவும் மனிதநேயமும் அதைத் தாங்கி நிற்கும் "சுவர்". உறுதியான சுவரின் மீது மட்டுமே நிலைத்து நிற்கும் சித்திரத்தை வரைய முடியும்.

சுய அறிவும் மனத்தூய்மையும் அற்ற தொழில்நுட்ப அறிவு மனிதகுலத்திற்குப் பேரழிவையே தரும் என்பதை உணர்ந்து, தொழில்நுட்ப வளர்ச்சியோடு மனிதநேயத்தை முதன்மைப்படுத்துவதே உலக அமைதிக்கு ஒரே வழியாகும்.

## பரிந்துரைகள்

இவ்வாய்வின் கண்டறிதல்களின் அடிப்படையில் நாட்டை வழிநடத்துவோருக்கும், கல்வியாளர்களுக்கும், சமூகத்திற்கும் கீழ்க்கண்ட முதன்மைப் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன:**கல்வி அமைப்புகளுக்கான பரிந்துரைகள் (Policy & Curriculum Recommendations)**

**18வயதில் சுய அறிவுக் கல்வி:** உயர்கல்வி நிறுவனங்களும் பாடத்திட்டக் குழுக்களும், மாணவர்கள் 18 வயதை அடையும் தருவாயில் குறிப்பாக கல்லூரி பருவத்தில் "நான் யார்?", "உடலின் வேதியியல் இயக்கம் என்ன?", "இயற்கைக்கும் மனிதனுக்குமான தொடர்பு என்ன?" போன்ற சுய அறிவை (Self-Realization) ஊட்டக்கூடிய கட்டாயப் பாடப்பிரிவை அறிமுகப்படுத்த வேண்டும்.

**அறநெறி வழியிலான தொழில் கல்வி:** வெறும் தொழில்நுட்பப் பயிற்சியோடு நிறுத்தாமல், ஒவ்வொரு தொழில் நுட்பக் கண்டுபிடிப்பையும் மனிதநேயத்துடனும் அறநெறியுடனும் கையாளும் பக்குவத்தை ("சுவர் மற்றும் சித்திரம்" தத்துவம்) மாணவர்களிடம் உருவாக்க வேண்டும்.

**நாட்டை வழிநடத்துவோர் மற்றும் அரசுக்கான பரிந்துரைகள் (Government & Leadership)**

**எல்லைகளைத் தாண்டிய மனிதநேயக் கொள்கை:** நாட்டை ஆள்பவர்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளையும் தொழில் நுட்பத்தையும் எல்லைப் போர்களுக்கும் அதிகாரப் போட்டிகளுக்கும் பயன்படுத்தாமல், மனிதகுலத்தின் பொதுவான வாழ்வியல் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தும் உலகளாவிய அமைதிக் கொள்கையை வகுக்க வேண்டும்.

**அன்னையின் மனத்தோடு கூடிய ஆட்சி முறை:** "சுத்தம் சோறு போடும்" உவமையின் படி, சுயநலமற்ற அன்னையின் மனத்தோடு மக்களின் ஆரோக்கியம், மனவளக் கல்வி மற்றும் சூழலியல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

**தனிமனிதன் மற்றும் சமூகத்திற்கான பரிந்துரைகள் (Individual & Social Practices)**

**அறுசுவை மற்றும் சமச்சீர் உணவுப் பழக்கம்:** மனித உடலின் ஒவ்வொரு உள்ளுறுப்பிற்கும் தேவைப்படும் நுண் ஊட்டச்சத்துக்களைப் பெற, ஒரே மாதிரியான தானியங்களை மட்டும் உண்ணாமல், இயற்கையின் உணவுச் சுழற்சியைப் புரிந்து கொண்டு அறுசுவை உணவைச் சமச்சீராக உட்கொள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**ஆட்டு மந்தை வாழ்க்கையிலிருந்து விடுதலை:** போலியான கருத்துப் பிம்பங்களிலிருந்தும், முரண்பாட்டு அரசியலிலிருந்தும் விடுபட்டு, தனக்குக் கொடுக்கப்பட்ட ஆறாம் அறிவின் வாயிலாகத் தன்னையும், தன் குடும்பத்தையும், சுற்றியுள்ள அனைத்து உயிரினங்களையும் அரவணைத்துப் பாதுகாக்கும் "ஆயுசு நூறு" அமைதி வாழ்க்கையைத் தனிமனிதர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## நூலடைவு

**தமிழ் இலக்கிய சான்றுகள்(Tamil Classical & Canonical Texts)**

1. திருவள்ளுவர். (2014). *திருக்குறள் உரைக்கோவை* (சாலமன் பாப்பையா, உரை.). மணிவாசகர் பதிப்பகம்.
2. திருமூலர். (2018). *திருமந்திரம்* (நிரம்ப அழகிய தேசியிகர், உரை.). சாரதா பதிப்பகம்.
3. ஔவையார். (2012). *மூதுரையும் கொன்றைவேந்தனும் தமிழ் உரையும்*. வானதி பதிப்பகம்.
4. தொல்காப்பியர். (2010). *தொல்காப்பியம்: பொருளதிகாரம்* (சு. துரைசாமிப் பிள்ளை, உரை.). தமிழ்ப் பல்கலைக்கழகம்.

5. கணியன்பூங்குன்றனார். (2015). புறநானூறு (பாடல்192). *சங்க இலக்கியம்: எட்டுத்தொகை* (பக். 412–415). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. பாரதியார், சி. (2008). *பாரதியார் கவிதைகள்* (முழுத் தொகுப்பு). விஜயா பதிப்பகம்.

**ஆங்கில நூல்கள் மற்றும் சர்வதேச ஆய்வுச் சான்றுகள்(English Books & International References)**

1. Darwin, C. (1859). *On the origin of species by means of natural selection, or the preservation of favoured races in the struggle for life*. John Murray.
2. Jablonski, N. G., & Chaplin, G. (2000). The evolution of human skin coloration. *Journal of Human Evolution*, 39(1), 57–106. https://doi.org/10.1006/jhev.2000.0403
3. Natterson-Horowitz, B., & Bowers, K. (2012). *Zoobiquity: What animals can teach us about health and the science of healing*. Vintage Books.
4. (1945). *Constitution of the United Nations Educational, Scientific and Cultural Organization*. UNESCO Documents. https://www.unesco.org/en/legal-affairs/constitution
5. World Health Organization. (2020). *Healthy diet: Key facts*. World Health Organization Guidelines. https://www.who.int/news-room/fact-sheets/detail/healthy-diet

## நன்றி

The author expresses sincere gratitude to all the mentors, scholars, and institutional supporters whose guidance and encouragement made this multidisciplinary study on the Philosophy of Humanity possible. Institutional Support:
The author gratefully acknowledges the Management, Principal, and Administration of Nandha Engineering College, Erode, for providing an enriching academic environment, research facilities, and continuous encouragement to pursue interdisciplinary philosophical and educational research. Academic & Library Fraternity:
Special thanks are extended to colleagues and scholars across the fields of Library and Information Science, Educational Philosophy, and Bio-Humanities whose insights during discussions enriched the conceptual foundation of this work—particularly regarding the synthesis of evolutionary biology, human physiology, and value-based education. Literary & Classical Inspirations:
The author bows in reverence to the eternal wisdom of classical Tamil literature—including the immortal works of Thiruvalluvar, Thirumoolar, Avvaiyar, and Kaniyan Poongundranar—whose timeless verses provided the ethical spine and foundational philosophy for this study. Family & Well-Wishers:
Deepest gratitude goes to family members and well-wishers for their unconditional patience, spiritual strength, and quiet support throughout the research and drafting process. Finally, the author dedicates this work to students, educational reformers, and global peace advocates with the sincere hope that its principles contribute toward a non-violent, compassionate, and self-aware global society.

## நிதி ஆதரவு

This research received no external funding

## நலன் முரண்பாடு

The authors declare no conflict of Interest

## தரவு கிடைப்புத்தன்மை

Data sharing is not applicable to this article as no new empirical datasets were generated or analyzed during the current study. All textual sources, classical literary references, biological frameworks, and educational models supporting the conclusions of this work are included in the published article and cited in the References section.

## நெறிமுறை அறிக்கை

Ethical Approval and Consent to Participate: Not applicable. This study is purely conceptual, philosophical, and literature-based. It did not involve any human participants, human biological tissues, animal subjects, or sensitive personal data. Consequently, formal ethical approval from an Institutional Review Board (IRB) or Ethics Committee was not required.
Human and Animal Rights: No research involving human participants or animals was performed by the author for this study. All cited biological and literary materials are derived from previously published, publicly accessible literature and classical texts.

## துணைநூல் பட்டியல்

தமிழ் இலக்கிய சான்றுகள் (Tamil Classical & Canonical Texts)

திருவள்ளுவர். (2014). திருக்குறள் உரைக்கோவை (சாலமன் பாப்பையா, உரை.). மணிவாசகர் பதிப்பகம்.

திருமூலர். (2018). திருமந்திரம் (நிரம்ப அழகிய தேசியிகர், உரை.). சாரதா பதிப்பகம்.

ஔவையார். (2012). மூதுரையும் கொன்றைவேந்தனும் தமிழ் உரையும். வானதி பதிப்பகம்.

தொல்காப்பியர். (2010). தொல்காப்பியம்: பொருளதிகாரம் (சு. துரைசாமிப் பிள்ளை, உரை.). தமிழ்ப் பல்கலைக்கழகம்.

கணியன் பூங்குன்றனார். (2015). புறநானூறு (பாடல் 192). சங்க இலக்கியம்: எட்டுத்தொகை (பக். 412–415). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

பாரதியார், சி. (2008). பாரதியார் கவிதைகள் (முழுத் தொகுப்பு). விஜயா பதிப்பகம்.

ஆங்கில நூல்கள் மற்றும் சர்வதேச ஆய்வுச் சான்றுகள் (English Books & International References)

Darwin, C. (1859). On the origin of species by means of natural selection, or the preservation of favoured races in the struggle for life. John Murray.

Jablonski, N. G., & Chaplin, G. (2000). The evolution of human skin coloration. Journal of Human Evolution, 39(1), 57–106. https://doi.org/10.1006/jhev.2000.0403

Natterson-Horowitz, B., & Bowers, K. (2012). Zoobiquity: What animals can teach us about health and the science of healing. Vintage Books.

UNESCO. (1945). Constitution of the United Nations Educational, Scientific and Cultural Organization. UNESCO Documents. https://www.unesco.org/en/legal-affairs/constitution

World Health Organization. (2020). Healthy diet: Key facts. World Health Organization Guidelines. https://www.who.int/news-room/fact-sheets/detail/healthy-diet